Acharya : Adiguru Sri Prajna Dakshinamurti Vidya Pitham, Theni. & Sri Bhuvaneswari Avadhuta Vidya Pitham. Pudukkottai.
Founder & Managing Trustee : Vedanta Sasthra Prachara Trust & Sri Dakshinamurti Seva Samiti, Theni.
SRI SWAMI CHIDBHAVANANDA ASHRAMAM, P.B. 23, Vedapuri, Chatrapatti Road, Theni - 625 531.
☎ 04546-253908 E-mail : swamiomkarananda@yahoo.com www.vedaneri.org
SRI SRI JUDGE SWAMIGAL ADHISTANAM, East 7th Street, Pudukkottai - 622 001. Ph : 04322-221440



ஸம்ப்ரதாய வித்தான ப்ரஹ்மஸ்ரீ ராஜகோபால கனபாடிகளுடைய மந்த்ரங்களின் மஹத்வம் பாகம் 1 புத்தகத்தை படித்துப்பார்த்தேன். இன்னும் பல பாகங்கள் வரப்போகிறது என்பதை அறிந்து மிக்க மகிழ்ச்சி. **காலத்தினால்செய்த நன்றி சிறிதுஎனினும்ஞாலத்தின் மாணப் பெரிது**. என்ற திருவள்ளுவருடைய குறளுக்கு ஏற்ப ப்ரஹ்மஸ்ரீ ராஜகோபால கனபாடிகள் செயலாற்றி வருகிறார்கள்.

இன்றைக்கு சாஸ்த்ரங்களை ஸம்ப்ரதாயமாக பரம்பரை பரம்பரையாக அறிந்து முறையாக எடுத்துச் சொல்பவர்கள். அதை மக்களுக்கு வழங்குபவர்கள் மிகவும் அரிது, அத்தகைய இந்த சந்தர்ப்பத்திலே மந்த்ர சாஸ்த்ரங்களுடைய மஹிமைகளையெல்லாம் அற்புதமாக யாதொரு சந்தேகமும் ஏற்படாத வண்ணம் அல்லது இருக்கின்ற சந்தேகங்களைப் போக்குகின்ற வண்ணம் ஸ்ரீராஜகோபால கனபாடிகள் இந்தப் புத்தகத்தை உருவாக்கியிருக்கிறார்.

இது தொடர்ந்து வைதிகஸ்ரீயில் வந்திருக்கிறது. நான் தொடர்ந்து இதை படித்துக்கொண்டிருந்தேன். இது நல்ல புத்தகமாக வந்தால் நன்றாக இருக்கும் என்றுகூட கருதினேன். அப்படியே புத்தகமாக வந்திருப்பது குறித்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். அதை ப்ரஹ்மஸ்ரீ ராஜகோபால கனபாடிகள் எனக்கு அனுப்பி வைத்து இதற்குத் தாங்கள் ஆசி வழங்கி அருளாசி, ஸ்ரீமுகம் தரவேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொண்டார்கள்.

அடியேனுடைய குருநாதர் ஸ்ரீசாந்தாநந்த ஸ்வாமிகள் மந்த்ர சாஸ்த்ரங்களிலே மிகச் சிறந்து விளங்கினார்கள். அவர்களும் மந்த்ரங்களை யெல்லாம் ஜபம் செய்து மஹத்தான ஸித்தியைப் பெற்றிருந்தார்கள். அவர்களுடைய அனுக்ரஹத்தை நான் இந்த நேரத்திலே ப்ரார்த்திக்கிறேன். ஸ்ரீராஜகோபால கனபாடிகள் வைதிக தர்ம ஸம்ரக்ஷணத்திற்காக நன்கு அருந்தொண்டாற்றி வருகிறார்கள்.

அவருடைய முயற்சியினால் பல நல்ல அற்புதமான புத்தகங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் நம்முடைய வைதிக தர்மத்திலே ச்ரத்தையை உடைய பெரியோர்கள் அனைவரும் ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ச்ரத்தை இல்லாதவர்களும் இதனையெல்லாம் முறையாக அறிவுப்பூர்வமாக நன்கு படித்தார்களேயானால் பரம ச்ரத்தை அபிவிருத்தியாகும் என்பதில் யாதொரு ஸந்தேகமும் இல்லை. **நிறைமொழி மாந்தர் ஆணையில் கிளந்த மறைமொழி தானே மந்திரம் என்ப** என்று தொல்காப்பியர் அருளியிருக்கிறார். ஆகவே மந்த்ரங்களெல்லாம் சாதாரண விஷயங்கள் அல்ல தனி மனிதனையும் சமுதாயத்தையும் உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்லும் ஆற்றல் மந்த்ர ஜபத்திற்கு உண்டு.

**மந்த்ரே தீர்த்தே த்விஜே தேவே தைவஜ்ஞே பேஷஜே குரௌ**

**யாத்ருஶீ பாவனா யஸ்ய  ஸித்திர் பவதி தாத்ருஶீ**

என்று சொன்ன ப்ரகாரம் எவ்வளவு தூரம் மந்த்ரத்திலே விசுவாசம் வைத்து அதனை ஜபம் செய்கிறோமோ அதற்கான பலனை எல்லோரும் அனுபவிக்க முடியும். அதனுடைய பலனை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. ஈடு இணையற்ற பலன்களைத் தரக்கூடிய ஆற்றல் மந்த்ர சாஸ்த்ரத்திற்கு இருக்கிறது. ஆகவே அத்தகைய மந்த்ர சாஸ்த்ரத்தை வழங்கியிருக்கிற ப்ரம்ஹஶ்ரீராஜகோபால கனபாடிகள் போற்றுதலுக்கும் பாராட்டுதலுக்கும் உரியவர்.

ஜகந்மாதா புவநேச்வரியினுடைய அருளால் ஸத்குருநாதருடைய பரம கிருபையால் ப்ரம்ஹஶ்ரீ ராஜகோபால கனபாடிகள் இது போன்ற ஸம்ப்ரதாயமான விஷயங்களை ஜனங்களுக்கு வழங்கி பரமோபகாரம் செய்ய வேண்டும் என்று ஜகதம்பாவை ப்ரார்த்தனை செய்து அவரை மனமார வாழ்த்துகிறேன். இந்த மந்த்ரங்களின் மஹத்வம் நூலைப் படிக்கின்றவர்கள் அனைவரும் மந்த்ரங்களின் அருமை பெருமைகளைத் தெரிந்து வருங்காலத் தலைமுறைக்குப் பயன்படும் வண்ணம் மந்த்ர சாஸ்த்ரங்களுடைய பெருமையை வெளிப்படுத்த வேண்டும் என்று சொல்லி பேரன்புடன் வாழ்த்துகிறேன்.

பேரன்புடன்

स्वामी ओङ्कारानन्दः